

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள தந்தை பெரியார் அரங்கில் நேற்று முன்தினம் (07.08.2024) தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகைக்கான அரசாணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜா ராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், தருமபுரி நகரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டது. இதேபோல் பென்னாகரத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வுகளில் உடன் நகரச் செயலாளர் நாட்டான் மாது, நகர் மன்றத் தலைவர் லட்சுமி மாது மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### தமிழில் பெயர்ப் பலகை வைக்காவிடில் நடவடிக்கை!

# அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கி பேச்சு!

சென்னை, ஆக. 9 -

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (07.08.2024) சென்னைப் பல்கலைக்கழக வளாகம், தந்தை பெரியார் அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை அரசாணை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை 1978ஆம் ஆண்டில் தோற்றுவித்து, கடந்த 45 ஆண்டுகளாக பல்வேறு படிநிலைகளில் உதவித்தொகை, மருத்து வப்படி மற்றும் உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தற்போது ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு திங்கள்தோறும் ரூ.3,500/ உதவித் தொகையுடன் ரூ.500/ மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில், 2022-2023ஆம் ஆண்டிற்கு தெரிவுசெய்யபப்பட்ட அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கான அரசாணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (07.08.2024) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் விழாவில் பேசியது வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர் 100 பேருக்கு மாத உதவித் தொகை இன்று வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்று மூன்று ஆண்டுகள் நிறைவு செய்து சிறப்பான பல்வேறு திட்டங்களை மக்களுக்காக வழங்கி நான்காவது ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த வகையில் இந்த மூன்றாண்டு காலத்திற்கான சாதனை மலர்கள் கூட துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து துறைகளின் சார்பில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் செய்தித் துறையின் சார்பில் ஒருங்கிணைந்து அச்சேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் அவர்கள் விரைவில் சாதனை மலரை வெளியிட இருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழ் வளர்ச்சித் துறைக்கு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை தந்தவர் என்பதும் உங்களுக்குத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் அந்த வழியில் நம்முடைய தாய்மொழிக்கு தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களை செயல்படுத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கிக் கொண்டு வருகிறார்கள்.

#### தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை!

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு விரைவில் எடுத்துச் சென்று மருத்துவப்படி மற்றும் உதவித் தொகை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பேருந்துகளில் கட்டணமில்லா பயணம், மருத்துவப்படி, இயற்கை எய்தினால் உதவித்தொகை, உள் ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவித் தொகையை உயர்த்தவேண்டும் என்கின்ற கோரிக்கையும் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவில் தீர்வு காணப்படும்.

இதனை தொடர்ந்து அமைச்சர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாத உதவித்தொகை வழங்குகிற வகையில் தேர்வு செய்யப்பட்டுள்ள 100 தமிழறிஞர்களுக்கு இந்த ஆண்டு மாத உதவித்தொகை 3500 ரூபாயும், 500 ரூபாய் மருத்துவப்படியும், தமிழ்நாடு முழுவதும் சென்று வருவதற்கு பேருந்தில் கட்டணமில்லா பயணத்திற்கான உத்தரவும் வழங்குகிற வகையில் இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகின்றார். தமிழறிஞர்களை ஊக்கப்படுத்துவதின் மூலம் தமிழ் மொழி மேலும் ஏற்றம் பெறுகின்ற வகையிலும் இதுபோன்ற உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆறாவது நினைவு நாளில் தமிழ் இனத்தினுடைய ஒவ்வொருவரின் உள்ளத்திலும் அவருடைய நினைவு எப்படி இருக்கிறதோ, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு வழங்குகின்ற உதவித் தொகை உத்தரவு நிச்சயமாக அதுபோல இன்றைக்கு அமைந்திருக்கின்றது. இந்த நிகழ்ச்சி சாலப்பொருத்தமாக அமைந்திருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய தலையாய கடமையில் இதுவும் ஒன்று என்று நான் கருதுகிறேன்.

#### வீரவணக்க நாள்!

இந்த நிகழ்ச்சியின் மூலம் அவருக்கு காணிக்கை செலுத்தக்கூடிய உணர்வை நாங்கள் பெறுகிறோம். முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஜனவரி மாதம் 25ஆம் நாள் வீரவணக்க நாள் என்று அரசியல் கட்சிகள் நடத்துகின்ற நிகழ்வுண்டு. அதனை போல மொழிப்போர் தியாகிகள் தினம் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, இந்த ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ஆம் நாள் தமிழ் மொழி தியாகிகள் தினமாக கடைபிடிக்கப்படும்.

மேலும், ஜுன் திங்கள் 3ஆம் நாள் செம்மொழி நாளாக கொண்டாடப்படும். செம்மொழி என்ற அந்தஸ்தை பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள். அவருடைய பிறந்தநாள் அன்று செம்மொழி நாளாக இனிமேல் அரசு விழாவாக நடத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி தமிழ் வளர்ச்சித் துறை ஆக்கபூர்வமான பணிகளை தொடர்ந்து செய்யும். தமிழ் பாதுகாக்கக் கூடிய, வளர்க்க கூடிய சூழ்நிலை நிச்சயமாக ஏற்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியை தருகின்றது, முதலமைச்சர் அவர்களுக்கு அதற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: பொது இடங்களில் தமிழில் பெயர்ப் பலகையை வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த மாதிரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் : ஏற்கனவே வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர் பலகை இடம் பெற வேண்டும். குறிப்பாக எந்த மொழியில் இருந்தாலும் தமிழ் மொழியில் அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு பெரிய அளவில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்கிற உத்தரவிருக்கிறது. ஏற்கனவே, அதற்கு இருந்த அபராத தொகை இப்போது அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் நலன் துறையும் இணைந்து இந்த நடவடிக்கை எடுக்கும். அரசின் உத்தரவை நடைமுறைப்படுத்தாவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கு அரசு தயங்காது. முதலமைச்சர் அவர்கள் அதை உறுதியாக தெரிவித்திருக்கிறார். எனவே, அந்த பணி இனி விரைவாக தொடங்கும். அதனை கண்டறிந்து தொழிலாளர் நலன் துறையின் மூலம் உரிய நடவடிக்கை எடுத்து அதற்கான அபராதம் விதித்து அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்படும். பெயர் பலகைகளில் தமிழில் இடம்பெறச் செய்வ தற்கு தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் நலன் துறையும் இணைந்து செயல்படும்.

கேள்வி: திரைப்படத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு அரசு ஏதாவது பேச்சு வார்த்தைக்கு அழைத்திருக்கிறதா?

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் : முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதற்கான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். அரசின் மூலமாக செய்ய வேண்டியதாக இருந்தால் உடனடியாக செய்யலாம். ஒரு நிர்வாகத்திற்கும் மற்றுமொரு நிர்வாகத்திற்கும் தொடர்பு இருந்தால் அதில் கலந்து பேசி நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளை முன்னிட்டு குன்னூர் நகர கழகம் சார்பில் குன்னூர் பேருந்து நிலையம் அருகில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி குன்னூர் நகர கழக செயலாளர் எம்.ராமசாமி தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தி புகழ் வணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சியில், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னணியினர் திரளாக கலந்து கொண்டனர்.



இராமேஸ்வரம் நகரில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கடலில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்கள் படகை இலங்கைக் கடற்படையினரின் ரோந்து கப்பல் மூலமாக மோதி மூழ்கடித்தது. அதில் மீனவர்களில் ஒருவர் கடலில் மூழ்கி இறந்தார். ஒரு மீனவரான இராமச்சந்திரன் காணாமல் தேடப்பட்டு வந்தார். நாட்கள் கடந்த நிலையில், அவரின் குடும்ப சூழ்நிலையை அறிந்த, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணாமல் போன மீனவர் இராமச்சந்திரன் குடும்பத்திற்கு, நேற்று முன்தினம் (7.8.2024) ரூ,10,00,000 வழங்க உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் பத்துலட்ச ரூபாயினை அவரது குடும்பத்திற்கு வழங்கினார். உடன் நகராட்சித் தலைவர் கே.இ.நாசர்கான் உள்ளார்.

### திருவாரூரில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதி ஊர்வலம்!

## பூண்டி கே.கலைவாணன் தலைமையில் ஏராளமானோர் பங்கேற்பு!

திருவாரூர், ஆக. 9-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, திருவாரூரில் மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் பிரமாண்ட அமைதிப்பேரணி நடைபெற்றது. கழக தோழர்களும் பொதுமக்களும் பெருந்திரளாக பங்கேற்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தின அமைதி ஊர்வலம் காலை 9 மணிக்கு திருவாரூர் பேருந்து நிலையம் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. மலர் மாலை அணிவிக்கப்பட்டு துவங்கியது.

மார்க்கெட், நேதாஜி சாலைகளின் வழியே முத்துவேலர் அஞ்சுகம் அரங்கிற்கு வந்தடைந்து, பேரறிஞர் அண்ணா சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, நகர கழகம் அருகே அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரில் பொதுமக்களுடன் நடைபெற்ற கலைஞர் நினைவுதின நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தினார்.

மேலும் காட்டூரில் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத்தம்மையார் நினைவிடத்திலும், புகழ் பெற்ற கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் பிரமாண்ட பளிங்கு சிலைக்கும் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

திருவாரூர் மற்றும் மாவட்டம் முழுவதும் நடைபெற்ற நினைவஞ்சலி நிகழ்வுகளில் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், மு. வெங்கடேசன், சாந்தி பாஸ்கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கழக சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், கோ.செல்வம், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, சோம செந்தமிழ் செல்வன், உமாபிரியா , ஆர்.பாலச்சந்திரன், நகர்மன்ற தலைவர்கள் மன்னை த.சோழராஜன், கவிதா.பாண்டியன், பாத்திமா பஷீரா, மும்தாஜ் நவாஸ்கான், புவனப்ரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர், ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், கோ.தெட்சிணாமூர்த்தி, எஸ்.ஜோதிராமன்,ப.பிரகாஷ், இரா. மனோகரன், கேப்டன் செல்வராஜ், ஐ.வி.குமரேசன், வே.மனோகரன், பா. பிரபாகரன், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், பால.ஞானவேல், டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரிசிவா, நா. கவியரசு, கே.வி.கே. ஆனந்த்,

நகரக் கழகச் செயலாளர்கள் வாரை.எஸ்.பிரகாஷ், வீரா. கணேசன், பா.சிவநேசன், எஸ்.வி.பக்கிரிசாமி, ராஜசேகர், நன்னிலம் பக்கிரி சாமி, பேரளம் தியாகு, ஏ.கே.டி.சேரன், பூண்டி. கே. கலைவேந்தன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் டி.செந்தில், காஞ்சித்துரை, செல்வ.ஜெயதேவன், கலைவாணி மோகன், கமால், கே.எஸ்.எஸ்.தியாக பாரி மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் மாநில மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர்க் கழகங்களின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய, தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6–ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைத்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா சிலை முன்பு வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநகரச் செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி கரூர் 80 அடி சாலையில் இருந்து பேருந்து நிலையம் வரை அமைதி பேரணி நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில், கிருஷ்ணராயபுரம் எம.எல்.ஏ. க.சிவகாமசுந்தரி, மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் பல்லவி ராஜா, மாநில சிறுபான்மையினர் பிரிவு இணைச் செயலாளர் முனவர் ஜான், மாவட்ட கழக நிர்வாகிகள் பூவை ரமேஷ்பாபு, பாரத், மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, நகர, ஒன்றிய பேரூர் செயலாளர்கள் – நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இன்னாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக முத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.